24.10.2017

தி இந்து

தமிழால் இணைவோம்

# வடகிழக்கு பருவமழை 26-ம் தேதி தொடங்குகிறது: 3 நாட்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு




வடகிழக்கு பருவமழை வரும் 26-ம் தேதி தொடங்க வாய்ப்புள்ளது என்றும், அதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 27-ம் தேதி முதல் 3 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய எஸ்.பாலசந்திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

தற்போதைய வானிலை நிலவரப்படி, அடுத்த 2 நாட்களில் தென்னிந்திய பகுதிகளில் இருந்து தென்மேற்கு பருவக் காற்று விலகி, அக்டோபர் 26-ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சாதகமான சூழல் நிலவி வருகிறது. எனவே, அடுத்த 2 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் பெரிய அளவில் மழை இருக்காது. ஆனால், 27

முதல் 29-ம் தேதி வரை 3 நாட்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. முதலில் கடலோரப் பகுதியில் தொடங்கும் மழை, படிப்படியாக தமிழகத்தின் உள் மாவட்டங்களுக்கும் பரவி பரவலாக மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சராசரி தேதி அக்டோபர் 20 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த தேதிக்கு முன்போ, பின்னரோ 8 நாட்களில் வடகிழக்கு பருவமழை தொடங்கினால், அது இயல்பையொட்டியதாக கருதப்படும். அக்.28-ம் தேதிக்கு மேல் தொடங்கினால், அது தாமதமாக தொடங்கியதாக கருதப்படும். கடந்த ஆண்டு 29-ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு எடுக்கப்பட்ட மழை அளவின்படி கடலூரில் 5 செமீ, தாமரைப்பாக்கத்தில் 4 செமீ, புதுச்சேரி, வானூரில் 3 செமீ, சென்னை நுங்கம்பாக்கம், திண்டிவனத்தில் தலா 2 செமீ, கேளம்பாக்கத்தில் 1 செமீ மழை பதிவாகியுள்ளது. சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்தில் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அவர் கூறினார்.

சென்னையில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு பகலில் வெயில் வாட்டிய நிலையில் திடீரென மேகம் திரண்டு மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.